# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## SUMMATIVE ASSESSMENT – I ( SEPTEMBER – 2012 )

Time : 3 Hours | TAMIL | Maximum Marks : 90

நேரம் : 3 மணி | CLASS – VIII | மதிப்பெண்கள் : 90

## தமிழ்

குறிப்பு :
1. கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
2. விடைகள் தெளிவாகவும் , அழகாகவும் உரிய பக்க எண்களுடன் இருத்தல் வேண்டும்.
3. மாணவர்களின் அறிவுத் திறனுக்கு ஏற்ப சொந்த நடையில் கட்டுரை எழுதுதல் வேண்டும்.
4. உரிய வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

### பகுதி –I ( படித்தல் மற்றும் எழுதுதல் )

அ. கொடுக்கப்பட்ட பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை எழுதுக.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பது பொன் மொழியாகும். தனிமனிதனுக்காக சமுதாயமும் , சமுதாயத்திற்காகத் தனிமனிதனும் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கையே கூட்டுறவு ஆகும். தனிமனிதன் சாதிப்பதை விடக் கூடி நின்று சாதிப்பதே சிறப்பாகும். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். இந்த அடிப்படையில் உருவானது தான் கூட்டுறவு இயக்கம். ஜெர்மன் நாட்டு உழவர்கள் யூதர்களிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கினர். அதைத் திருப்பித் தர இயலாமல் மிகவும் துன்பமடைந்தனர். எனவே உழவர்களின் துயரைப் போக்கும் வகையில் இரப்பீசன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது தான் கூட்டுறவு சங்கம். பின்னர் இந்தியாவிலும் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் பல பிரிவுகளாக அமைந்து செயல்படுகிறது. இதில் ஏழை எளிய மக்கள் பலரும் உறுப்பினராகி பயன் பெறுகின்றனர். கூட்டுறவு சங்கம் மூலம் செயல்படும் வங்கியிலோ , வணிக நிறுவனங்களிலோ உறுப்பினர்கள் பொருள் வாங்கினால் இதற்குரிய இலாபம் உறுப்பினருக்கு கிடைக்கின்றது. குறைந்த வட்டியில் பணமும் குறைந்த விலையில் பொருட்களும் கிடைக்கின்றன. தரமான பொருட்கள் , விதை , உரம் , மருந்து போன்றவை மலிவான விலையில் பெற முடிகின்றது. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பது பழமொழி. கூட்டுறவினால் மக்களிடம் ஒற்றுமை உணர்வு பெருகுகின்றது. இப்படிபட்ட கூட்டுறவு இயக்கங்களில் நல்லவர்கள் இடம்பெற வேண்டும். பொதுநலம் பேணுகின்ற பெரியோர்களிடம் சங்கம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதில் அரசியல் , சாதி இடம்பெறும்போது தீமைகள் தோன்றுகின்றன. இந்த குறைகளை நீக்கி கூட்டுறவு நடைபெற்றால் மாபெரும் வெற்றியடையலாம்.

விடையளி 5 x 2 =10

1.கூட்டுறவு என்றால் என்ன ?

2.கூட்டுறவுச் சங்கம் யாரால் , எங்கு ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?

3.கூட்டுறவுச் சங்கத்தால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

4.கூட்டுறவு இயக்கம் எப்போது வெற்றி பெறும் ?

5.கூட்டுறவை விளக்கும் சில பழமொழிகளை எழுதுக.

ஆ.கீழ்க்காணும் தலைப்புகளில் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் கட்டுரை எழுதுக.

1.நான் விரும்பும் தலைவர் **1 x 10 = 10**

2.தேசிய ஒருமைப்பாடு

இ.கீழ்க்காணும் தலைப்புகளில் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் கடிதம் எழுதுக. **1 x 10 =10**

1.நீ கண்டு களித்த பொருட்காட்சி பற்றித் தோழன் / தோழிக்குக் கடிதம் எழுதுக.

2.உன் சகோதரியின் திருமணத்திற்குத் தோழன் / தோழியை அழைத்து கடிதம் எழுதுக.

## பகுதி – II ( இலக்கணம் )

அ.பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1.திரிசொல்

( அ) காடு ஆ) ஆழி இ) நோக்கினான் )

2.வடிவப் பண்புப்பெயர்

( அ) கருங்குதிரை ஆ) முப்பால் இ) சதுரக்குழி )

3.இடவாகு பெயர்

( அ) ஊர் சிரித்தது ஆ) வெற்றிலை நட்டான் இ) ஈகையுள்ளம் )

ஆ.தகுந்த விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. 3 x 1 = 3

1.ஒரு பொருள் செய்யும் தொழிலை உணர்த்தும் பெயர் ___________

( அ) பண்புப்பெயர் ஆ) தொழிற்பெயர் இ) ஆகு பெயர் )

2. ஆகு பெயர் ____________ வகைப்படும்

( அ) ஆறு ஆ) பத்து இ) பதினாறு )

3. பேறு என்பது ____________ தொழிற்பெயராகும்

அ) விகுதி பெற்ற தொழிறபெயர்

ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ. அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க. 3 x 1 = 3

1. பல் ( பெயர்த் திரிசொல் தருக)

( அ) நல்குரவு ஆ) எயிறு இ) ஞாயிறு )

2. வறுவல் தின்றான் ( எவ்வகை ஆகுபெயர் )

( அ) தொழிலாகு பெயர் ஆ) முதலாகு பெயர் இ) குணவாகு பெயர் )

3. கேடு ( விகுதி பெற்ற தொழிற்பெயராக்குக)

( அ) கெடு ஆ) தீது இ) கெடுதல்

ஈ. பொருத்தமான இலக்கணக் குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1. ஞாயிறு

( அ) பெயர் இயற்சொல் ஆ) வினை இயற்சொல் இ) பெயர் திரிசொல் )

2. பசுந்தளிர்

( அ) சுவைப் பண்புப்பெயர் ஆ) நிறப் பண்புப்பெயர் இ) காலவாகு பெயர் )

3. தலைக்கு ஒரு மாம்பழம் கொடு

( அ) பண்பாகு பெயர் ஆ) தொழிலாகு பெயர் இ) சினையாகு பெயர் )

உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1. அ) புஷ்பம் என்பது திரிசொல்

ஆ) புஷ்பம் என்பது வடசொல்

இ) புஷ்பம் என்பது திசைச்சொல்

2. அ) ஊர் சிரித்தது - இடவாகு பெயர்

ஆ) ஊர் சிரித்தது - தொழிவாகு பெயர்

இ) ஊர் சிரித்தது - பண்பாகு பெயர்

3.அ) ஆட்டம் என்பது முதனிலைத் தொழிற்பெயர்

ஆ) ஆட்டம் என்பது முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) ஆட்டம் என்பது விகுதி பெற்ற தொழிற்பெயர்

## பகுதி – III ( மொழிப்பயிற்சி )

அ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1 = 3

1.குறிஞ்சிப்பாட்டில் உள்ள பூக்களின் எண்ணிக்கை

( அ) தொண்ணூறு ஆ) தொண்ணூற்றாறு இ) தொண்ணூற்றொன்பது

2.வெடியே போடாத ஊர்

( அ) திருவாரூர் ஆ) திருவண்ணாமலை இ) கூந்தன்குளம்

3.உ.வே.சா. 'என் சரிதம்' தொடர் எழுதிய இதழ்

( அ) குங்குமம் ஆ) ஆனந்த விகடன் இ) இந்தியா டுடே

ஆ.எவையேனும் மூன்றனுக்கு மட்டும் பொருள் கூறு எழுதுக. 3 x 1 = 3

1) வையகம் 2) யாக்கை 3) சரிதம் 4) வற்றல் 5) சரணாலயம்

இ.பிரித்து எழுதுக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1) அருந்தமிழ் 2) அ்.திலார் 3) தமக்குரியர் 4) பேருதவி 5) காடாகு

ஈ.எதிர்ச்சொல் எழுதுக. ( மூன்று மட்டும் ) 3 x 1 = 3

1) சுருக்கமாய் 2) இயற்கை 3) நட்பு 4) வற்றல் 5) தமக்கு

உ. பொருத்துக. 6 x ½ = 3

| | | |
|---|---|---|
| 1.உ.வே.சா நூலகம் | - | ஔவையார் |
| 2.குறிஞ்சிப்பாட்டு | - | காஞ்சிபுரம் |
| 3.புறநானூறு | - | திருநெல்வேலி |
| 4.வேடந்தாங்கல் | - | இராமலிங்க அடிகளார் |
| 5.வள்ளலார் | - | சென்னை , பெசன்ட் நகர் |
| 6.கூந்தன் குளம் | - | கபிலர் |

## பகுதி – IV ( செய்யுள் , உரைநடை & துணைப்பாடம் )

அ.கொடுக்கப்பட்ட உரைநடைப் பகுதியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி

பழைய ஓலைச்சுவடியில் இருப்பதைப் பார்த்து எழுதி புத்தகமாக வெளியிட்டவர் தமிழ்த்தாத்தா உ.வே.சா.அவர்கள் ஆவார். ஓலைச்சுவடி என்பது பனை ஓலையைப் பக்குவப்படுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதப்படுவதாகும். 'குறிஞ்சிப்பாட்டு' பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் கபிலர் ஆவார். இதனையும் உ.வே.சா .அச்சில் பதிப்பித்து வெளியிட்டார். உ.வே.சா. அவர்களின் இயற்பெயர் வேங்கடரத்தினம். இவரது ஆசிரியர் , மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் என்பவர் இட்ட பெயரே சாமிநாதன் என்பதாகும். அதனால் தான் , உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் என்பதன் சுருக்கமே உ.வே.சா. எனப்பட்டது. இவர் பெயரால் 1942 இல் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம் இன்றும் சென்னையில் உள்ள பெசன்ட் நகரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. உ.வே.சா.அவர்கள் பதிப்பித்த நூல்களுக்கு என்றும் தமிழர்களிடையே பெரும் மதிப்பும் வரவேற்பும் இருக்கும்.

வினாக்கள் : 5 x 1 = 5

1.ஓலைச்சுவடிக்குப் பயன்படுத்தப் பட்ட ஓலை

( அ) தென்னை ஓலை ஆ) பனை ஓலை இ) ஈச்ச ஓலை )

2.குறிஞ்சிப்பாட்டு இவரால் இயற்றப்பட்டது

( அ) உ.வே.சா ஆ) பாரதிதாசன் இ) கபிலர்

3.உ.வே.சா. அவர்களின் இயற்பெயர்

( அ) தமிழ்த்தாத்தா ஆ) வேங்கட சுப்பையர் இ) வேங்கட ரத்தினம் )

4.மீனாட்சி சுந்தரம்பிள்ளை உ.வே.சா. அவர்களுக்கு யார் ?

( அ) தந்தை ஆ) மகன் இ) ஆசிரியர்

5.உ.வே.சா.நூல்நிலையம் நிறுவப்பட்ட இடம்

( அ) திருவாரூர் ஆ) சென்னை இ) மதுரை

ஆ.கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளி :

5 x 1 = 5

நாடாகு ஒன்றோ ; காடாகு ஒன்றோ ;
அவலாகு ஒன்றோ ; மிசையாகு ஒன்றோ ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை ; வாழிய நிலனே !

வினாக்கள் :

1.இப்பாடல் இடம்பெற்ற நூலின் பெயர் யாது ?

( அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறிஞ்சிப்பாட்டு

2.இப்பாடலின் ஆசிரியர் யார் ?

( அ) பாரதியார் ஆ) ஔவையார் இ) வள்ளலார்

3.' அவல்' என்பதன் பொருள் கூறு.

( அ) பள்ளம் ஆ) மேடு இ) பெண்

4.' மிசை' என்பதன் எதிர்ச்சொல் எழுது.

( அ) மேடு ஆ) உடல் உறுப்பு இ) பள்ளம்

5.இப்பாடல் ஆசிரியர் வாழ்ந்த காலம்

( அ) கற்காலம் ஆ) தற்காலம் இ) சங்ககாலம்

இ.கீழ்க்காணும் செய்யுட் வினாக்களுள் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

1.அன்புடையார் நிலையையும் , அன்புடையார் இயல்பையும் விளக்குக. 1 x 5 = 5

2.எவர் வானுலகத்தில் தேவராய் வாழ்வர்.? அறத்திற்கும் மறத்திற்கும் அன்பு துணையாவது எப்படி ?

**ஈ. கீழ்க்காணும் உரைநடை வினாக்களுள் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.**

1 x5 = 5

1.குறிஞ்சிப்பாட்டு நூலைப் புதுப்பிக்க உ.வே.சா மேற்கொண்ட முயற்சி என்ன ?

2.பறவைகள் சரணாலயம் என்றால் என்ன ? கூந்தன்குளக் கிராமச் சரணாலயம் குறித்து எழுதுக.

**உ.கீழ்க்காணும் துணைப்பாட வினாக்களுள் ஒன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.** 1 x 5 = 5

1.சடகோவிற்கு நேர்ந்த துன்பத்தினை எழுதுக.

2.சடகோவின் தன்னம்பிக்கையை விளக்கும் நிகழ்ச்சியை எழுதுக.

**ஊ.அடிமாறாமல் எழுதுக.** 2+3 = 5

1.'என்பிலதனை' எனத் தொடங்கும் குறள் அல்லது 'பிறர்க்கு' என முடியும் குறள்.

2.'கண்ணில் கல...' என்கிற திருவருட்பா பாடலை எழுதுக.

**********************